அளிக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சலுகையையும், அதாவது அவர்களின் அந்தப் பணத்தையும் ஸ்பெஷல் ஆபீசர்ஸ் அக்கவுண்ட்டில் போட்டுள்ளார்கள். நெசவாளர்களுக்கு அந்தச் சலுகை போய்ச் சேரவில்லை. அதை அரசு விரைவில் பரிசீலிக்குமா என்பதை மீண்டும் அரசிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுப் பதிவாளரோடு கலந்தாலோசித்து மானியம் வராத நெசவாளர்களுக்கு வருவதற்காக ஆவன செய்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 69, திரு. எஸ். நாகூர் மீரான், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்.

69—

கூட்டுறவு நூற்பாலை.

*1495—திரு. எஸ். நாகூர் மீரான்:

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கடையநல்லூர் பகுதியில் அரசு கூட்டுறவு நூற்பாலை அமைக்கும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது'

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இது போன்ற திட்டமே இல்லை. (சிரிப்பு).

திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் தொகுதி மிகவும்பின்தங்கிய பகுதியாக இருப்பதாலும், அந்தப் பகுதியில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட கைத்தறி நெசவாளர்கள் நலிவடைந்த நிலையில் உள்ளதாலும், அவர்கள் வாழ்வில் ஒளியேற்ற, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில், இந்த கடையநல்லூர் தொகுதி மீது கருணை காட்டி, அரசு கூட்டுறவு நூற்பாலை அமைக்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் கடையநல்லூர் பகுதிக்கு அருகாமையில், தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலை 50 ஆயிரம் கதிர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. 50 ஆயிரம் கதிர்கள் கொண்ட நூற்பாலை செயல்பட்டு வருகிறது. குறிப்பாக, தமிழகத்தில் ஏறத்தாழ 18 நூற்பாலைகள்

1992 பிப்ரவரி 6]

இருக்கின்றன. இவைகளில் உற்பத்தி செய்யப்படுகிற நூல் சிட்டநூல், மற்றும் கோன் நூல் போன்றவை நெசவாளர்களுக்குத் தருவதுபோக மீதி இருக்கிறது. இப்போது தமிழகம் நூல் உற்பத்தியில் உபரி மாநிலமாக இருக்கிற காரணத்தினால், தற்சமயம் அது தேவையில்லை என்று துறை கருதுகிறது.

முற்பகல் 10-10

திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் தொகுதி மட்டுமல்லாது சுற்றுப் பக்கத்தில் உள்ள சங்கரன்கோயில், தென்காசி போன்ற பகுதிகளில் 10,000-க்கும் மேற்பட்ட நெசவுத் தொழிலாளர்கள் உள்ளனர். எனவே, வரும் ஆண்டிலாவது, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியிலாவது எனது கோரிக்கை பரிசீலிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்த மாவட்டத்தில் ஒரு நூற்பாலை இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், நாம் நூல் உற்பத்தியில் உபரி மாநிலமாக இருக்கின்றோம். நம்முடைய நூற்பாலைகள் இல்லாமல், பல நூற்றுக்கணக்கான நூற்பாலைகள் தமிழகத்திலே இருக்கின்றன. நூல் உற்பத்தி விநியோகத்தில் நாம் உபரி மாநிலமாக இருக்கின்ற காரணத்தால் தற்போது இது அவசியம் இல்லை என்று துறை கருதுகின்ற காரணத்தால், இதைப் பரிசீலிக்க இயலாது என்பதனை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 70, திரு. ஓ. எஸ். அமர்நாத், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

70—

வைகை ஆற்றைக் கடக்க மதுரையில் புதிய பாலம்.

*3252—திரு. ஓ. எஸ். அமர்நாத் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை நகரில் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட விக்டர் பாலம் உடைந்து விழும் நிலையில் உள்ளதால் மாற்று வழியாக வேறு பாலம் ஒன்றை தியாகராசர் கல்லூரி பக்கம் வைகை ஆற்றைக் கடந்து அண்ணா நகரை இணைக்க பாலம் கட்டப்படுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?